அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.22/2016
தேதி.20.01.2016

# நிர்வாகிகள் நீக்கம்
## ச.ம.க நிறுவனர் தலைவர், புரட்சித்திலகம்
## ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிவிப்பு

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் மாநில மகளிரணி துணைச் செயலாளராக பதவி வகித்து வந்த திருமதி.மா.ரா.ஜெமிலா, முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலமாக கட்சிக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டும், கட்சிக் கட்டுப்பாட்டை மீறி தன்னிச்சையாக செயல்பட்டும் வந்துள்ளார். இந்நிலையில் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இருப்பதை அறிந்து, சமூக வலைத்தலங்கள் மற்றும் பத்திரிக்கை வாயிலாக சமத்துவ மக்கள் கட்சியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருக்கிறார். அதன் அடிப்படையில் திருமதி மா.ரா.ஜெமிலா மாநில மகளிரணி துணைச் செயலாளர் பொறுப்பிலிருந்தும், ஆலந்தூர் தொகுதிச் செயலாளர் பொறுப்பிலிருந்தும், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் உடனடியாக விடுவிக்கப்படுகிறார்.

மேலும் இதே அடிப்படையில் நிதி ஆலோசகர் பொறுப்பு வகித்து வந்த டாக்டர் ராஜசேகர் அவர்களும் அப்பொறுப்பிலிருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்கள் இருவருடனும் யாரும் கட்சி சம்பந்தப்பட்ட எந்த தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்